அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம்
International Tamil Education Cultural Scientific Development Federation

# அரையாண்டுத்தேர்வு 2015-2016

## தமிழ்மொழி
## வளர்நிலை 5

பெயர் : ______________________________

நேரம் : 150 நிமிடங்கள்
மொத்தப்புள்ளிகள் : 100

1) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடத்தில் எழுதுக!

1. தமிழரின் வீரத்தைக் கூறும் நூல் ______________________ ஆகும்.
(திருக்குறள், நாலடியார், புறநானூறு)

2. தமிழரின் சிறந்த பண்புகளில் ஒன்று ______________________ ஆகும்.
(விருந்தோம்பல், காட்டிக்கொடுத்தல், செய்ந்நன்றி மறத்தல்)

3. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகள் ______________________ ஆகும்.
(முப்பது, இருநூற்றுநாற்பத்தியேழு, இருநூற்றுப்பதினாறு)

4. தை இரண்டாம் நாள் ______________________ கொண்டாடப்படும்.
(தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும்பொங்கல்)

5. சொல்லாமல் செய்வோர் ______________________ .
(பெரியர், சிறியர், வறியர்)

6. ஒருவரை அறிந்த பின்தான் ______________________ வேண்டும்.
(வீட்டுக்கு அழைக்க, நட்புக் கொள்ள, ஓடி ஒளிக்க)

7. உலகை இயங்க வைப்பது ______________________ ஆவான்.
(நிலவு, காற்று, கதிரவன்)

8. தமிழர் விழாக்களின் போதும் சிறப்பு நாட்களின் போதும் ______________________ போடுவர்.
(கோலம், சோறு, விளக்கு)

9. அன்பினால் விளைவது ______________________ ஆகும்.
(பகை, வீரம், நட்பு)

10. இடுக்கண் என்றால் ______________________ .
(மகிழ்ச்சி, துன்பம், கோபம்)

11. வேறொரு நாட்டிலிருந்து இந்நாட்டிற்குள் பொருட்களைக் கொண்டு வருதல் ______________________ எனப்படும்.
(ஏற்றுமதி, இறக்குமதி, வணிகம்)

12. நல்லவர்களுக்குச் செய்த உதவி ________________________ எழுத்துப் போன்றது.
(நீர்மேல், கல்மேல், மணல்மேல்)

13. நல்ல நட்புக்கு எடுத்துக்காட்டாக அமைவது __________________ ஆகும்.
(நீர்ச்செடிகள், நீர்ப்பறவைகள், நீருயிரிகள்)

14. ஒலிம்பிக் விளையாட்டுகள் ________________________ நாட்டில் தோற்றம் பெற்றது.
(உரோம, அராபிய, கிரேக்க)

15. உடலுக்குத் தேவையானதை அறிந்து உண்டால் _____________________ தேவையில்லையென வள்ளுவர் கூறுகின்றார்.
(ஓய்வு, மருந்து, மகிழ்ச்சி)

16. போர் முறைகளுடன் தொடர்புடைய விளையாட்டு _____________________ ஆகும்.
(சடுகுடு, கிளித்தட்டு, கொக்கான் வெட்டு)

17. பசுவின் _____________________க் கேட்டுக் கன்றுக்குட்டி ஓடி வந்தது.
(குறளை, குரலை, குராலை)

18. இடம் + பெயர்வு இதைச் சேர்த்து எழுதினால் _____________________.
(இடம்பெயர்வு, இடம்ப்பெயர்வு, இடப்பெயர்வு)

19. ஆடற்கலையின் சிறப்புப் பற்றிக் கூறும் நூல் _____________________ ஆகும்.
(நாலடியார், சிலப்பதிகாரம், தொல்காப்பியம்)

20. பண்டைத் தமிழர்கள் உலகெங்கும் பரந்து சென்று _____________________ செய்தனர்.
(சண்டை, வேலை, வணிகம்)

21. பொதுமக்களுக்காக ஆடப்படும் ஆடல் வகை __________________ ஆகும்.
(பொதுவியல், வேத்தியல், பரதம்)

22. நரம்புக் கருவிகளில் ஒன்று _____________________.
(மிருதங்கம், நாகசுரம், வீணை)

23. மாறன் கோபத்தால் பற்களை ______________________ எனக் கடித்தான்.
(கரகர, நறநற, படபட)

24. பழமொழி – முயற்சி உடையார் ______________________ அடையார்.
(இகழ்ச்சி, புகழ்ச்சி, மகிழ்ச்சி)

25. தமிழர் ஆடிப்பிறப்பன்று ______________________ காய்ச்சுவர்.
(பொங்கல், சோறுகறி, ஆடிக்கூழ்)

26. தமிழை ______________________ மொழி என்பர்.
(துன்பமான, இனிமையான, இலகுவான)

27. மார்கழி மாதக் குளிர்காற்று ______________________ வீசியது.
(சில்லென்று, சல்லென்று, சுள்ளென்று)

28. இறந்தகாலத்திற்குரிய முடிக்கும் சொல் ______________________.
(வருகின்றார், வந்தார், வருவார்)

29. மாடு கத்தும் அதுபோல நாய் ______________________.
(சீறும், உறுமும், குரைக்கும்)

30. இங்கு பல நூல்கள் உள்ளன. ______________________ சிலவற்றையே நான் படித்திருக்கின்றேன்.
(அவற்றுள், இவற்றுள், எவற்றுள்)

(30 புள்ளிகள்)

2) பின்வரும் ஆங்கில வாக்கியங்களை தமிழில் மாற்றி எழுதுக!

1. My mother is at home.

________________________________________

________________________________________

2. Pupils must not be lazy.

________________________________________

________________________________________

3. Mary walking to school.

________________________________________

________________________________________

4. The cat is under the bed.

________________________________________

________________________________________

5. The children are playing football.

________________________________________

________________________________________

(10 புள்ளிகள்)

3) கீழேயுள்ள பகுதியை வாசித்துத் தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக!

சென்ற ஆண்டு கோடைகால விடுமுறைக்கு நான் தாயகம் சென்றேன். நான் பல தடவைகள் அங்கு சென்றிருந்தாலும் இம்முறை முதல் தடவையாக திருகோணமலைக்குச் சென்றேன். வளர்நிலை 4 படிக்கும் போது திருகோணமலை பற்றி அறிந்த அனைத்தையும் அங்கு நேரில் கண்டு மகிழ்ந்தேன். ஐந்தீச்சுரங்களில் ஒன்றான கோணேச்சுரம் கோவில், இராவணன் வெட்டு, இயற்கைத் துறைமுகம், கன்னியா வெந்நீர்க் கிணறுகள் போன்றவற்றை மேலதிக விபரங்களுடன் பார்த்தும் கேட்டும் மகிழ்ந்தேன். பார்க்கும் இடமெல்லாம் அழகு. ஆனால் நான் அதிகம் வியந்தது கன்னியா வெந்நீர்க் கிணறுகளைப் பார்த்துத் தான். அருகருகே உள்ள ஒவ்வொரு கிணறும் ஒவ்வொரு வெப்பநிலை. என் கையால் நீரைத் தொட்டே அதை அறிந்து கொண்டேன். அது இராவண மன்னன் தன் தாயின் ஈமக்கடனுக்காகத் தோண்டிய கிணறுகள் என்பது ஏற்கனவே கதைகள் மூலம் நான் அறிந்த விடயம். அந்தக் கிணறுகளில் நீராடிய சுகம் என்னால் மறக்கவே முடியாது.

1. தாயகம் சென்றவர் முதல் தடவையாகச் சென்ற இடம் எது?

______________________________________________

______________________________________________

2. அங்கு அவர் கண்ட சிறப்பான விடயங்கள் எவை?

______________________________________________

______________________________________________

3. கன்னியா வெந்நீர்க் கிணறுகளின் சிறப்பென்ன?

______________________________________________

______________________________________________

4. வெந்நீர்க் கிணறுகள் எதற்காகத் தோண்டப்பட்டதாகக் கதைகள் கூறுகின்றன?

________________________________________

________________________________________

5. இக்குறிப்பை எழுதுபவர் தான் மறக்கமுடியாதது என்று எதைக் கூறுகின்றார்?

________________________________________

________________________________________

(10 புள்ளிகள்)

4) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை வாழிட மொழியில் எழுதுக!

1. கோடை காலத்தை மக்கள் எல்லோரும் விரும்புவர்.

______________________________________________

______________________________________________

2. ஒரு நல்ல மனிதனை உருவாக்குவது குடும்பம் ஆகும்.

______________________________________________

______________________________________________

3. சிறுவர்கள் பனியில் சறுக்கி விளையாடுவர்.

______________________________________________

______________________________________________

4. சிறுவயதிலேயே நல்ல பழக்கங்களைக் கற்க வேண்டும்.

______________________________________________

______________________________________________

5. எனது உறவினர்களில் பலர் கனடாவில் வாழ்கின்றார்கள்.

______________________________________________

______________________________________________

(10 புள்ளிகள்)

5) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதி, பந்தியை நிறைவு செய்க!

தமிழர்களுக்குரிய கொண்டாட்டங்கள் தைப்பொங்கலும் ____________________ ஆகும். இவ்விரண்டும் இயற்கையைப் போற்றிக் கொண்டாடப்படும் விழாக்களாகும். இது தமிழனின் உயர்ந்த _________________________ சிறப்பைக் காட்டுகின்றது. புலம்பெயர் நாடுகளிலும் இவ்விழாக்கள் கொண்டாடப்படுவது சிறப்பான விடயம். இதன் மூலம் எம் இனத்தின் _______________________ பேணப்படுகின்றது. நாம் அனைவரும் தமிழர்கள் என்ற ____________________ இன்றைய இளைய தலைமுறைக்கும் கொண்டு செல்லப்படுகின்றது. நாம் எந்த நாடுகளில் வாழ்ந்தாலும் தமிழர்களாக வாழ _____________________.

| | | |
|---|---|---|
| வேண்டும் | ஆடிப்பிறப்பும் | உணர்வு |
| பண்பாட்டுச் | தனித்துவம் | |

(10 புள்ளிகள்)

6) பொருத்தமான சொற்றொடரைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக!

| | | | | |
|---|---|---|---|---|
| பார்க்கப் பார்க்க | சீரும் சிறப்புமாக | இன்பமும் துன்பமும் | பதுங்கிப் பதுங்கி | மடமட |

1. இயற்கை அழிவுகளால் ______________________________ வாழ்ந்த பல குடும்பங்கள் இன்று நிலைகுலைந்து விட்டன.

2. குழந்தைகளின் குறும்புகள் _________________________ அழகாக இருக்கும்.

3. பூனை எலியைப் பிடிக்கப் ______________________________ வந்தது.

4. விளையாடிக் களைத்த சிறுவன் தண்ணீரை _________________________ எனக் குடித்தான்.

5. வாழ்க்கை _________________________________ இரண்டறக் கலந்தது.

(5 புள்ளிகள்)

7) படத்தைப் பார்க்கும்போது உங்களுக்குத் தோன்றுவதை முப்பது சொற்களுக்குக் குறையாமல் எழுதுக!



(10 புள்ளிகள்)

8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, ஐம்பது சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக!

அ) தமிழ்மொழி
(சிறப்புகள், எழுத்து வகைகள், நூல்கள், சிறப்பு ஒலி, முத்தமிழ், இலக்கண, இலக்கிய வளம்)

ஆ) கோடைகாலம்
(வெயில், சுற்றுலா, மகிழ்ச்சி, மரங்கள், பசுமை, பூக்கள், கொண்டாட்டங்கள்)

(15 புள்ளிகள்)